# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 132/2016**

**ஆணை எண். 162/2016**

**நாள் : 05/10/2016**

திரு. பி.என். ஸ்ரீனிவாசன்,
சென்னை – 37. – **மனுதாரர்**

மண்டல அலுவலர்,
மண்டலம் –7,
சென்னை மாநகராட்சி,
சென்னை –53. – **எதிர் மனுதாரர்**

சென்னை மாநகராட்சி, மேற்கு முகப்பேர், AIBEA நகர், மனை எண்.52 முகவரியில் வசிக்கும் திரு.பி.என்.ஸ்ரீனிவாசன் அவர்களின் 24.02.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறை மன்ற நடுவத்தில் 25.02.2016 அன்று பெறப்பட்டு 132/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

**ஆணை**

சென்னை மாநகராட்சி, மேற்கு முகப்பேர், AIBEA நகர், மனை எண்.52 முகவரியில் வசிக்கும் திரு. பி.என்.ஸ்ரீனிவாசன் அவர்கள், AIBEA நகர் வீட்டுமனைப்பிரிவில் பொதுப்பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட மனை ஆக்கிரமிப்புக்கு உள்ளானது குறித்து கீழ்க்காணும் தகவல்களை இம்முறை மன்ற நடுவத்திற்கு தெரிவித்திருந்தார்:-

(1) ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை;

(2) பொதுப்பயன்பாட்டு இடத்தில் ஆக்கிரமிப்பாளருக்கு பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது;

(3) முறைகேடாக கழிவு நீர் குழாய் அமைக்கப்பட்டு, பொதுப்பயன்பாட்டு நிலம் குறைந்துள்ளது;

(4) மனையை சீர்படுத்தப்படாமலேயே ஆழ்துளை கிணறு, மனையின் முகப்பிலேயே அமைக்கப்பட்டுள்ளது;

(5) பயன்படுத்தப்படும் தண்ணீர் செல்வதற்கான வழியை முறையாக கண்டறியப்படவில்லை;

(6) தானப் பத்திரப்படி மனையின் அளவை சரிபார்க்கப்படவில்லை;

(7) பொதுப்பயன்பாட்டு மனையை மேம்படுத்த முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை;

மேற்படி மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது.

2. சென்னை மாநகராட்சி, 7–வது மண்டல அலுவலர் தனது அறிக்கையில் மேற்குறிப்பிட்ட பொதுப்பயன்பாட்டு மனை அங்கீகரிக்கப்பட்ட AIBEA நகர் மனைப் பிரிவில் புல எண்.603/1A14 மற்றும் 603/1A15–ல் 1930 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது என்றும், இம்மனை 04.10.2002 நாளிட்ட ஆவண எண்.5619/2002 மூலம் உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். பொதுப்பயன்பாட்டு மனை ஆக்கிரமிப்பு மற்றும் மேம்பாடு சம்பந்தமாக 01.08.2016 அன்று மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது பொதுப்பயன்பாட்டு நிலத்திற்கு வேலி அமைத்து பாதுகாக்கப்படவில்லை என்றும் 2014 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் மனை மேம்பாட்டு பணி தொடங்கிய பூமி பூஜைக்கு குடியிருப்பு சங்கத்தினருக்கு தெரிவிக்கப்படவில்லை என தனது ஆதங்கத்தையும் மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் மேம்பாட்டு பணியைத் தொடங்கியபோது முறையான அளவு செய்து மனையின் பரப்பளவை கண்டறியப்படவில்லை. மேலும் ஆக்கிரமிப்பாளருக்கு போதுமான அளவு பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது என்றும் பொதுப்பயன்பாட்டு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்த கருமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மனுதாரர் தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

3. மண்டல அலுவலர் மேற்குறிப்பிட்ட பொதுப்பயன்பாட்டு மனைப்பிரிவை நில அளவை செய்து, மனையின் நீள அகல எல்லைகளை கணக்கிட்டுத் தருமாறு அம்பத்தூர் வட்டாட்சியரிடம் கோரியிருந்தார். 02.08.2016 அன்று நடைபெற்ற விசாரணையின்போது 15 நாட்கள் கால அவகாசத்தில் பொதுப்பயன்பாட்டு நிலம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிப்பதாக உறுதி அளித்ததுடன் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ஆவண நகல்களை பெற்றுச் சென்றார். விசாரணைக்குப்பின் மண்டல அலுவலர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். 08.08.2016 அன்று அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக நில அளவை சார் ஆய்வாளர் தல ஆய்வு செய்து புல எண்.603/1A-14ல் உள்ள பொதுப்பயன்பாட்டு நிலம் சம்பந்தமான வரைபடம் அளித்துள்ளார் என்றும் அதன் அடிப்படையில் 10.08.2016 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு புதிய சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு, தற்பொழுது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். பொதுப்பயன்பாட்டு நிலம் ஆக்கிரமிப்பு அகற்றல் மற்றும் மேம்படுத்தல் சம்பந்தமாக எடுக்கப்பட்ட 15 புகைப்பட நகல்களையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

4. அம்பத்தூர் மண்டலம், மேற்கு முகப்பேர் AIBEA நகர் மனைப்பிரிவில் பொதுப்பயன்பாட்டிற்கான மனையின் ஆக்கிரமிப்புகள் தற்போது அகற்றப்பட்டு பொதுப்பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் உள்ளாட்சி அமைப்புகள் தனது பொது சொத்தை பாதுகாப்பதற்குக்கூட, பொதுமக்கள் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தையோ அல்லது நீதிமன்றங்களையோ நாடியே பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டி உள்ளது என்பது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பெருமை தேடித்தரும் செய்தி அல்ல. தனது சொத்தை பாதுகாப்பதுபோல், தான் பணிபுரியும் உள்ளாட்சி அமைப்பின் சொத்துக்களையும் பாதுகாப்பது மிக முக்கிய கடமையாகும். வட்டாட்சியருக்கு கடிதம் எழுதியுள்ளேன் எனக் காலம் கடத்துவது முறையான செயல் அல்ல. மாநகராட்சி ஆணையர் பொதுவான கண்டிப்பான அறிவுரை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கவேண்டும் என இம்முறைமன்ற நடுவம் விரும்புகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

**திரு. பி.என்.ஸ்ரீனிவாசன்,**
**மனை எண்.52, AIBEA நகர்,**
**முகப்பேர் மேற்கு,**
**சென்னை – 600 037.**

**மண்டல அலுவலர்,**
**அம்பத்தூர் மண்டலம்**
**(மண்டலம் –7),**
**அம்பத்தூர்,**
**சென்னை –53.**

**மாநகராட்சி ஆணையர்,**
**சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் கட்டிடம்,**
**சென்னை – 600 003.**

/உண்மை நகல்/

செயலாளருக்காக.